மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்
முன்னிலை:திரு.ஆர்.மணிவர்மன், பி.ஏ., பி.எல்., எல்.எல்.எம்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, மேட்டூர்
2022 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 16 ஆம் நாள் செவ்வாய்கிழமை
இ.ம.எண்.02/2022
அ.வ.எண்.295/2010

1. ராஜம்மாள்
2. கந்தசாமி
(மனநிலை சரியில்லாததால் 2 ம்மனுதாரர்
சார்பாக அவரது தாயார் ராஜம்மாள்) ... மனுதாரர்கள்/1, 3 ம்பிரதிவாதிகள்

/எதிராக/

1. கௌரி
2. வேலுசாமி
3. மோகன்ராஜ் ... எதிர்மனுதாரர்கள்/வாதி, 2, 4 ம் பிரதிவாதிகள்

இம்மனு கடந்த 01.08.2022 ஆம் தேதியன்று இந்நீதிமன்றம் முன்பாக இறுதியான விசாரணைக்கு வரப்பட்டு மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.வி.ரணதேவ் அவர்கள் ஆஜராகியும், 1 ம்எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.பி.பாலமுருகன் அவர்கள் ஆஜராகியும், 2, 3 ம்எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.பி.கோபிநாத் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரை எமது ஆய்வில் இருந்து வந்து மேற்படி இம்மனுவில் இந்நீதிமன்றம் வழங்கிடும்.

<u>உத்தரவு</u>

இம்மனு உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 8 விதி 9 பிரிவு 151 ன் கீழ் 1 ம்பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ள கூடுதல் எதிர்வழக்குரையை ஏற்று உத்தரவிடக்கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுவாகும்.

<u>1) மனுப்பிரமாணப் பத்திரிக்கையின் சுருக்கம்</u> : –

இம்மனுதாரர்கள்/1, 3 ம்பிரதிவாதிகள் மற்றும் 2, 3 எதிர்மனுதாரர்கள்/2, 4 ம்பிரதிவாதிகளுக்கு எதிராக 1 ம் எதிர்மனுதாரர்/வாதியால் பாகப்பிரிவினை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரங்கள் கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வழக்கு சொத்தானது மனுதாரர்களுக்கு கூட்டு பங்குரிமை உள்ள சொத்தாகும். 1 ம் மனுதாரரின் மகனான, 2 ம்எதிர்மனுதாரரான வேலுசாமி தான் வழக்கு

நடவடிக்கைகளை கவனித்து வந்தார். அவர் மனுதாரர்களை கலந்து ஆலோசிக்காமல் எதிர்மனுதாரர்களுடன் சேர்ந்து கொண்டு வழக்கு சொத்தை அபகரிக்க நினைக்கிறார். வழக்கு நடவடிக்கைகளை சரிபார்த்த போது தான் 1ம் மனுதாரருடைய மகன்களுக்கு மட்டும் வழக்கு சொத்தில் உரிமை உள்ளதாக கூறியிருந்தது இம்மனுதாரர்களுக்கு தெரியவந்தது. ஆனால் வழக்கு சொத்துகளை 1ம் மனுதாரர் தான் மேற்பார்வை செய்துவருகிறார். 1ம் மனுதாரருக்கு படிப்பறிவு இல்லை என்பதால் நீதிமன்ற நடவடிக்கைகள் குறித்து தெரியவில்லை. 1ம் மனுதாரருக்கு வழக்கு சொத்தில் சரிசம உரிமை உள்ளது. மேற்படி உண்மைகளை மறைத்து எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரரின் பங்கை நிர்ணயம் செய்ய கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய வேண்டியுள்ளது. எனவே இத்துடன் தாக்கல் செய்யப்பட்ட கூடுதல் எதிர்வழக்குரையை ஏற்று உத்தரவிட கோரி மனுதாரர்கள்/1, 3ம் பிரதிவாதிகள் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்கள்.

<u>2) 1ம் எதிர்மனுதாரர்/வாதியால் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்:</u>

மனு பொய்யானது. சட்டப்படிக்கும், சங்கதிகளின் படிக்கும் நிலைக்கத்தக்கதல்ல. மனுவில் கூறியுள்ள சங்கதிகள் அனைத்தும் பொய்யானதாகும். மனுதாரர்கள் ஏற்கனவே தாக்கல் செய்த எதிர்வழக்குரையை விட்டுவிட்டு புதியதாக கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய முடியாது. பி.வா.சா.1 குறுக்கு விசாரணைக்கு வாய்தா போடப்பட்டுள்ள நிலையில் வழக்கினை காலதாமதப்படுத்த மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே மனுவை அதிகபட்ச செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென 1ம்எதிர்மனுதாரர்/வாதி கூறியுள்ளார்.

<u>3) 2ம் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டு, 3ம் எதிர்மனுதாரரால் ஏற்றுக் கொள்ளப்பட்ட எதிருரையின் சுருக்கம்:</u>

மனு பொய்யானது. சட்டப்படிக்கும், சங்கதிகளின் படிக்கும் நிலைக்கத்தக்கதல்ல. மனுவில் கூறியுள்ள சங்கதிகள் அனைத்தும் பொய்யானதாகும். மனுதாரர்கள் இந்த எதிர்மனுதாரர்களுக்கு மட்டும் உரிமையுள்ளது என ஏற்கனவே ஒப்புக் கொண்டுள்ள நிலையில் தற்போது இந்த கூடுதல் எதிர்வழக்குரையை தாக்கல் செய்துள்ளார். எதிர்வழக்குரையில் கூறியுள்ள சங்கதிகளை மறுதலிக்கும் விதமாக சங்கதிகள்

கூறப்பட்டுள்ளது. ஏற்கனவே கூறப்பட்டுள்ள சங்கதிகளை மறுதலிக்கும் விதமாக கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய முடியாது. மனுதாரர்களுக்கு எதிர்மனுதாரர்கள் தான் உரிமையாளர்கள் என்பது நன்றாக தெரியும். உயிலின் அடிப்படையில் தன்னுடைய பங்கை 5 ம்பிரதிவாதி விற்பனை செய்துள்ளார். இந்த எதிர்மனுதாரர்கள் பகுதி சொத்தை 1 ம்எதிர்மனுதாரருக்கு திருமணம் மற்றும் சீர் செய்வதற்காக விற்பனை செய்துள்ளார்கள். தற்போது வரை மனுதாரரை எதிர்மனுதாரர்கள் தான் பராமரித்து வருகின்றனர். மறுதலிக்கும்விதமாக மனுதாரர்கள் கூறியுள்ளது முரண்தடையால் பாதிக்கப்பட்டுள்ளது. மனுதாரர்கள் தூய கரங்களுடன் நீதிமன்றத்தை அணுகவில்லை என்பதால் மனுவை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென 2, 3 ம்எதிர்மனுதாரர்கள்/2, 4 ம்பிரதிவாதிகள் கூறியுள்ளார்கள்.

4) இருதரப்பு கற்றறிந்த வழக்குரைஞர்களின் மதிப்பிற்குரிய வாதங்கள் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் முன்னிலைப்படுத்தவில்லை.

4) பிரச்சினை :–

இம்மனு அனுமதிக்கத்தக்கதா என்பதே ஆகும்.

5) பிரச்சினைக்கான தீர்வு

(i) மனுதாரர்கள்/1, 3 ம் பிரதிவாதிகள் தரப்பில் இத்துடன் தாக்கல் செய்யப்பட்ட கூடுதல் எதிர்வழக்குரையை ஏற்று உத்தரவிட கோரி மனுதாரர்கள்/1, 3 ம் பிரதிவாதிகள் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளது தெரியவருகிறது.

(ii) 1 ம் எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் மனுதாரர்கள் ஏற்கனவே தாக்கல் செய்த எதிர்வழக்குரையை விட்டுவிட்டு புதியதாக கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய முடியாது எனவும், பி.வா.சா.1 குறுக்கு விசாரணைக்கு வாய்தா போடப்பட்டுள்ள நிலையில் வழக்கினை காலதாமதப்படுத்த மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது எனவும், எனவே மனுவை அதிகபட்ச செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென 1 ம் எதிர்மனுதாரர்/வாதி கட்சி செய்துள்ளது தெரியவருகிறது.

(iii) 2, 3ம்எதிர்மனுதாரர்கள்/2, 4ம்பிரதிவாதிகள் தரப்பில் உயிலின் அடிப்படையில் தன்னுடைய பங்கை 5ம்பிரதிவாதி விற்பனை செய்துள்ளார் எனவும், இந்த எதிர்மனுதாரர்கள் பகுதி சொத்தை 1ம்எதிர்மனுதாரருக்கு திருமணம் மற்றும் சீர் செய்வதற்காக விற்பனை செய்துள்ளார்கள் எனவும், தற்போது வரை மனுதாரரை எதிர்மனுதாரர்கள் தான் பராமரித்து வருகின்றனர் எனவும், மறுதலிக்கும்விதமாக மனுதாரர்கள் கூறியுள்ளது முரண்தடையால் பாதிக்கப்பட்டுள்ளது எனவும், மனுதாரர்கள் தூய கரங்களுடன் நீதிமன்றத்தை அணுகவில்லை என்பதால் மனுவை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென 2, 3ம்எதிர்மனுதாரர்கள்/2, 4ம்பிரதிவாதிகள் கட்சி செய்துள்ளது தெரியவருகிறது.

(iv) வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்ததில் இவ்வழக்கானது பாகப்பிரிவினை கோரியும், நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது தெரியவருகிறது. அசல் வழக்கில் 1 மற்றும் 3வது பிரதிவாதிகளான இம்மனுதாரர்களுக்கு வழக்கு சொத்தானது கூட்டு பங்குரிமை சொத்து என்றும், 1ம் மனுதாரரின் மகனான, 2ம்எதிர்மனுதாரர் தான் வழக்கு நடவடிக்கைகளை கவனித்து வந்தார் என்றும், அவர் மனுதாரர்களை கலந்து ஆலோசிக்காமல் எதிர்மனுதாரர்களுடன் சேர்ந்து கொண்டு வழக்கு சொத்தை அபகரிக்க நினைக்கிறார் என்றும், வழக்கு நடவடிக்கைகளை சரிபார்த்த போது தான் 1ம் மனுதாரருடைய மகன்களுக்கு மட்டும் வழக்கு சொத்தில் உரிமை உள்ளதாக கூறியுள்ளது இம்மனுதாரர்களுக்கு தெரியவந்தது என்றும் கூறியுள்ளார்.

(v) 1ம் மனுதாரருக்கு படிப்பறிவு இல்லை என்பதால் நீதிமன்ற நடவடிக்கைகள் குறித்து தெரியவில்லை என்றும், 1ம் மனுதாரருக்கு வழக்கு சொத்தில் சரிசம உரிமை உள்ளது என்றும், மேற்படி உண்மைகளை மறைத்து எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளதை கருத்தில் கொள்கையில் ஒரு வழக்கானது அதன் முழுமையான விசாரணைக்கு பின்பு தான் தீர்வு காணப்பட வேண்டும் என்பதாலும், வழக்கு விசாரணையில் தரப்பினர்களுக்கு அவரவர் வாத பிரதிவாதங்களை எடுத்துரைப்பதற்கு நியாயமான சந்தர்ப்பம் அளிப்பது அவசியமானது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

(vi) இந்நிலையில் விசாரணை நீதிமன்றத்தில் தான் தரப்பினர்கள் தங்களுடைய சாட்டுரையை (Pleadings) முன்னிலைப்படுத்த முடியும் என்பதாலும், மனுதாரர்கள் தங்களுடைய வழக்கை நிரூபிக்க கூடுதல் பதிலுரையை ஏற்றுக்கொள்ள உத்தரவிடுவது நீதிக்கு உகந்தது என்பதாலும் இம்மனு அனுமதிக்கத்தக்கது என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. ஆனால் மனுதாரர்கள் காலதாமதமாக இம்மனுவினை தாக்கல் செய்துள்ளதால் மனுதாரர்களால் எதிர்மனுதாரர்களுக்கு ஏற்பட்ட காலவிரையத்தை ஈடுசெய்யும் வகையில் மனுதாரர்கள், 1ம் எதிர்மனுதாரருக்கு ரூ.250/–ம், 2, 3 எதிர்மனுதாரர்களுக்கு கூட்டாக (jointly) ரூ.250/–ம் செலவுத்தொகையாக செலுத்தும் பட்சத்தில் இம்மனுவினை அனுமதிக்கலாம் என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

முடிவாக மனுதாரர்கள், 1ம் எதிர்மனுதாரருக்கு ரூ.250/–ம், 2, 3 எதிர்மனுதாரர்களுக்கு கூட்டாக (jointly) ரூ.250/–ம் செலவுத்தொகையாக 26.08.2022 க்குள் செலுத்தும் பட்சத்தில் இம்மனு அனுமதிக்கப்படும் என உத்தரவிடப்படுகிறது. தவறும் பட்சத்தில் இம்மனு தானாகவே தள்ளுபடி ஆகிவிடும் என உத்தரவிடப்படுகிறது. அழைக்க 26.08.2022.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2022 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 16 ஆம் நாள் இந்த திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

ஒப்பம்/–திரு.ஆர்.மணிவர்மன்,<br>
மாவட்ட உரிமையியல் நீதிபதி,<br>
மேட்டுர்.

<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் :– இல்லை</u>

<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:–</u> இல்லை

ஒப்பம்/–திரு.ஆர்.மணிவர்மன்,<br>
மாவட்ட உரிமையியல் நீதிபதி,<br>
மேட்டுர்.